STR-4-TA

# வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் ஒவ்வொரு படியாக - நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கிறிஸ்தவர்களில் நான்கில் ஒருவர் அவர்களுடைய வாழ்நாளில்தானே இயேசு மீண்டும் வந்திடுவார் என்பதை விசுவாசிக்கின்றனர். எதிர்காலத்தை குறித்து கரிசனையுடைய நம் அனைவருக்கும் தேவன் கூறிடும் செய்திதான் வெளிப்படுத்தின விசேஷம். அதில் சபைகளுக்கு இயேசு கிறிஸ்து இறுதியாக சொல்லிடும் வார்த்தைகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளான எடுத்துக்கொள்ளப்படுதல், இரண்டாம் வருகை, இறுதி நியாயத்தீர்ப்பு, சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும் என்பதையும், அந்திகிறிஸ்து, தவறான மார்க்கத்தை பின்பற்றுகிறவர்களின் நிலைகளை கூறுகிறது. உபத்திரவகாலத்தில் நடக்க இருக்கும் கொடூரமான காரியங்களை கூறி எதிர்காலத்தை குறித்து இயேசு எச்சரிக்கிறார், அர்மகேதொன் யுத்தம், இந்த பூமியில் அவருடைய இரண்டாம் வருகை குறித்தவை. இந்த புத்தகத்தில் ஆயிரவருட அரசாட்சி, இந்த பூமியில் வாழ்ந்த ஒவ்வொருவருக்குமான இறுதி நியாயதீர்ப்பு, தம்முடைய ஜனங்களுக்காக நித்தியத்தில் என்ன திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார் என்பதை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு, உங்களை படிப்படியாக இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை தெளிவாக புரிந்துகொள்ளும் விதத்தில் நடத்திசெல்ல இருக்கிறோம், தேவன் முன்னறிவித்திருக்கும் எதிர்கால நிகழ்வுகள் சம்பவங்கள் எல்லாம் சமீபித்திருப்பதை நீங்கள் புரிந்துகொள்ள உதவிடுவோம். இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். தேவன் நமக்கு வெளிப்படுத்தின விசேஷம் என்ற அருமையான புத்தகத்தை கொடுத்திருக்கிறார். குறிப்பாக கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த உலகில் நடக்கும் நிகழ்வுகளின் எந்த நிலையில் இருக்கிறோம் எதிர்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதை நமக்கு கூறுகிறார். தேவன் கூறியது நிச்சயம் சம்பவிக்கும். சரி, பலருக்கு இந்த வெளிப்படுத்தின விசேஷம் பெரும் சவாலாக இருக்கிறது, இன்றைக்கும், நாம் அதை புரிந்துகொள்ளும் படி விளக்கி சொல்ல ஒருவர் இங்கிருக்கிறார். அவர்தான் Dr. ஜிம்மி டியோங், அவர் ஒரு பத்திரிக்கையாளர் புனித பூமியில் வாழ்ந்தவர், இஸ்ரேல், 1993 லிருந்து இருக்கிறார். அந்த நாட்களிலிருந்து ஒவ்வொரு பிரதமர்களிடமும் நேர்காணல் நடத்தியிருக்கிறார். மத்திய கிழக்கு பகுதிகளை

பற்றி கரைத்து குடித்திருக்கிறார். அவர் ஒரு தீர்க்கதரிசன பண்டிதராக இருக்கிறார், அதை பற்றி நீங்கள் தொடர்ந்து கேட்க இருக்கிறீர்கள். எனக்கு, இவரிடம் பிடித்த விஷயம் என்னவென்றால் இவருடைய விளக்கத்தை கேட்க்கும் போது, வெளிப்படுத்தின விசேஷத்தை பற்றி எல்லாராலும் புரிந்துகொள்ள முடியும். இதை குறித்த பரந்த கண்ணோட்டத்தை அளிக்கிறோம், மேலும் இதுவரை இதை பார்த்திராத நேயர்கள், மற்றும் இன்றைக்கு எங்களோடு முதல்முறையாக இணைந்தவர்களுக்காக இதை கூறிட இருக்கிறோம், இங்கிருக்கும் இந்த 3 தூண்கள், என்னவென்று, கூறி வெளிப்படுத்தல் புத்தகத்தை விளக்கமாக பார்க்க இருக்கிறோம்.

**Dr. ஜிம்மி டியோங்**: ஜான், வெளிப்படுத்தல் புத்தகத்தின் 3 நிகழ்வுகளும் ஒன்றன் பின் ஒன்றாக இருப்பதற்கும் கடைசி கால உபதேசத்தில் இந்த முக்கிய நிகழ்வுகளை புரிந்துகொள்வதற்கும் ஏதுவாக எளிமையாக விளக்குகிறது, இதில் நாம் இந்த, வெளிப்படுத்தின விசேஷம் முழுவதையும் பார்க்கிறோம். இந்த முதலாவது தூண் அடுத்து நடக்க இருக்கும் நிகழ்வை கூறுகிறது, அதுதான் சபை எடுத்துக்கொள்ளப்படுதல். இயேசுவின் தொனி, பிரதான தூதனின் சத்தம், தேவனுடைய எக்காளம் முழங்கப்படும்போது நாம் இயேசுகிறிஸ்துவோடு மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம். சரி, அது இதுவரை சம்பவிக்கவில்லை, நீங்களும் நானும் இங்கேயே தான் இருக்கிறோம். அடுத்ததாக சம்பவிக்கப்போகிற நிகழ்வானது எடுத்துக்கொள்ளப்படுதல் தான். நாம் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு சற்று அருகில் இருக்கிறோம்.

5 ம் அதிகாரம், தூதர்களின் பெருங்கூட்டம் ஆர்ப்பரிக்கிறார்கள், “ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்.” அதற்கு பிறகு, சில காலங்களுக்கு, அது சுமார் 7 ஆண்டு காலமாக இருக்கும், அதை உபத்திரவ காலம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 6 ம் அதிகாரம் 3 நிலைகளிலான நியாயத்தீர்ப்பின் ஆரம்பம், அவை என்னவென்றால் 7 முத்திரை நியாயத்தீர்ப்பு, 7 எக்காள நியாயத்தீர்ப்பு மற்றும் 7 கலச நியாயத்தீர்ப்பு. இந்த 21 நியாயதீர்ப்புகளும் இந்த 7 ஆண்டுகளில் அதிக கொடுமை நிறைந்ததாக இருந்திடும். முதல் மூன்றரையாண்டுகளின் பின்னாலிருந்து செயல்படுவது கள்ளத்திருச்ச்சபை ஆக இருக்கும் அதை, வெளிப்படுத்தல் 17ல் பார்க்கிறோம். இந்த முதல் மூன்றரையாண்டு காலத்தில் 2 சாட்சிகள் பிரசங்கிக்கிறவர்களாக இருப்பார்கள். இந்த 2 சாட்சிகளும் கொல்லப்படுவார்கள், அவர்கள் எருசலேமின் வீதிகளில் 3½ நாட்கள் வீசப்பட்டிருப்பார்கள், அதற்க்கு பிறகு அவர்கள் உயிரோடேழுப்பப்பட்டு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

உபத்திரவ காலத்தின் மத்திய பகுதியில், வானமண்டலத்தில் ஒரு யுத்தம் நடக்கும் அதில் நல்ல தூதர்களை, வழிநடுத்துவது பிரதான நபரான, மீகாவேல், பிரதான தூதர். அவருக்கும் தீய தூதர்களுக்கும் நடக்கும், தீயவர்களை முன்னின்று நடத்துவது, சாத்தான். இதன் முடிவில் சாத்தானும் அவனுடைய தூதர்களும் பூமிக்கு தள்ளப்படுவார்கள். அப்பொழுது பரலோகத்தில் இருப்பவர்கள், “தேவனுக்கு ஸ்தோத்திரம், சாத்தான் இல்லை என்பார்கள்.” பூமியில் இருப்பவர்களோ, “ஓ, சாத்தான் பூமிக்கு வந்தான் என்பார்கள்,”

அவன் யூத ஜனங்களை உபத்திரவப்படுத்திட துவங்கிடுவான், அவர்களை பூமியிலிருந்து வேரோடு அழிக்க முயலுவான்.

உபத்திரவ காலத்தின் கடைசி மூன்றரை ஆண்டுகளில், 7 எக்காள நியாயதீர்ப்பும் 7 கலச நியாயதீர்ப்பு உண்டாயிருக்கும். இந்த, கடைசி மூன்றரை ஆண்டுகளின் பின்னணி ஒரே உலகம், ஒரே பொருளாதாரம், அரசியல், அரசாங்க அமைப்பு இவை பாபிலோன் நகரத்தை தலைமையகமாக கொண்டிருக்கும், உண்மையான பாபிலோன் நகரம், ஐப்பிராத்து நதியின் கரை ஓரத்தில் இருக்கிறது, அதுதான் இந்த நவீன காலத்தின் ஈராக்காக இருக்கிறது. அந்த காலத்தின் முடிவில், நமக்கு தெரிந்திருப்பதுபோல கர்த்தரும் இரட்சகருமான கிறிஸ்து, சபை எடுத்துக்கொள்ளப்படுதலின் போது வானங்களில் ஏறிச்சென்றவர்களோடு,வெள்ளை குதிரையின் மேல் வருவார். அது உண்மையான குதிரைகளாக இருக்கும் என்று நான் நம்புகிறேன், இயேசு வெள்ளை குதிரையின் மேல் ஏறி, பூமிக்கு வந்திடுவார், எருசலேம் நகரத்திற்கு வந்திடுவார். அதுதான் கிறிஸ்துவை பற்றிய வெளிப்பாடு இயேசு கிறிஸ்து மறுபடியும் வந்திடுவார்.

அர்மகேதொன் யுத்தம் நடைபெறும். அதற்கு பிறகு அவர் தமது ஆயிர வருட அரசாட்சியை நிறுவிடுவார், அப்போது சாத்தான் 1000 வருடங்களுக்கு பாதாளக்குழியில் அடைக்கப்பட்டிருப்பான். அந்த ஆயிர வருடத்தின் முடிவில், சில காலத்திற்கு சாத்தான் அவிழ்க்கப்பட்டிருப்பான், மறுபடியும் தேவனால் கட்டப்படுவான், அதற்கு பிறகு பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு, அந்த நேரத்தில், இயேசுவே நியாயாதிபதியாக இருப்பார். அவரை புறக்கணித்த அனைவரையும் அவர், அக்கினி கடலிலே தள்ளப்ப்படும்படி கட்டளியிடுவார், ஏனென்றால் அவர்களுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் காணப்படாமல் இருக்கும். அதற்கு பிறகு நித்திய வாழ்வு, புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அருமையாயிருக்கு, ஜிம்மி. சிலர் தங்களையே குழப்பிக்கொள்கிறார்கள், எப்படிஎன்றால், இயேசுகிறிஸ்து திரும்பவும் வருவார் என்று தெரியும், இரண்டாம் வருகையை பற்றி தெரிந்திருக்கிறார்கள், இப்ப ஆகாயத்தில் அவரோடு எடுத்துக்கொள்ளப்படும் சம்பவத்தையும், அவர் இந்த பூமிக்கு திரும்ப வரும் சம்பவத்தையும் கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்க.

**Dr. ஜிம்மி டியோங்**: இது மிகவும் முக்கியமானது. இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய நாள் இரவு மேல்வீட்டறையில் பஸ்காவை ஆசரிக்கும்போது சொன்னது நினைவிருக்கிறதா. அவர் கூறினார், “உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்.” அவர் எடுத்துக்கொள்ளப்படுதலை கூறுகிறார். எடுத்துக்கொள்ளப்படுதலில், அவர் பூமிக்கு திரும்ப வருவதில்லை. அவர் நம்மை ஆகாயத்தில் கூட்டி சேர்த்துக்கொள்வார். அதுதான் எடுத்துக்கொள்ளப்படுதல். அப்போது கிறிஸ்தவர்கள் எல்லாரும் பூமியிலிருந்து வேறு இடத்திற்கு

மாற்றப்படுவார்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நாம் எல்லாரும் வெள்ளை குதிரைகளில், இயேசுகிறிஸ்துவோடு மறுபடியும் பூமிக்கு வந்து அர்மகேதொன் யுத்தத்திற்கு பிறகு அவருடைய இராஜ்யத்தை நிறுவிடுவோம். சோ, அவரை நாம் மத்ஹ்டிய ஆகாயத்தில் சந்திப்போம், எடுத்துக்கொள்ளப்படுதல், பிறகு வானத்திலிருந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவரோடு கூட பூமிக்கு வருவோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இந்த 21 நியாயதீர்ப்புகள், மோசமாகிக்கொண்டே இருக்கும் என்று கூறினீர்கள். அதைதான் இயேசு மத்தேயு 24 லிலும் கூறியிருக்கிறார், இதைதான், பெண்ணின் பிரசவ காலத்தோடு ஒப்பிடுகிறார்கள், ஒரு குழந்தை பிறக்கும்போது, ஆரம்பத்தில் வலி வந்துவந்து போகும், சிறிது நேரத்திற்கு, பிறகு அடிக்கடி எர்ப்படுவதொடு, அதிக வேதனை நிறைந்ததாகவும் இருக்கும். அந்த உபத்திரவ காலத்திலும் அப்படிதான் நடக்கும் என்று சொல்லுகிறீர்கள். அந்த 7 முத்திரை நியாயத்தீர்ப்பையும் உபத்திரவ காலத்தையும் பற்றி கூறிடுங்கள்.

**Dr. ஜிம்மி டியோங்**: 7 முத்திரை நியாயதீர்ப்பில் அந்திகிறிஸ்துவின் உதயமும் அடங்கும். அவன் வெள்ளை குதிரையின் மேல் வருவான், 6ம் அதிகாரத்தில் இருக்கிறது, வசனம் 1 மற்றும் 2. வசனம் 3 மற்றும் 4, சிவப்பு குதிரையின் மேல் ஏறியிருப்பவன், அது உலகமெங்கிலும் நடக்க இருக்கும் யுத்தத்தை குறிக்கிறது, குறிப்பாக, மத்திய கிழக்கு பகுதி, தேசங்கள் ஒன்றுதிரட்டப்படும் கருப்பு குதிரையின் மேல் ஏறியிருப்பவன் கையில் தராசை பிடித்திருப்பான், அது பஞ்சத்தை குறிக்கிறது. “ஒரு பணத்திற்கு ஒருபடி கோதுமை, ஒரு பணத்திற்கு 3 படி வாற்கோதுமை.” பஞ்சம் உண்டாகும், அதுதான் 3 வது முத்திரை நியாயத்தீர்ப்பு. மங்கின குதிரையின் மேல் ஏறியிருப்பவன் மரணம், அந்த சமயத்தில், இந்த நியாயதீர்ப்பினால் பூமியின் ஜனத்தொகையில் நான்கில் ஒருபங்கினர் கொல்லப்படுவார்கள். அது நான்கு பேருக்கு ஒருவர் என்றிருக்கும் – 1.5 பில்லியன் மக்கள். இதற்க்கு பிறகு அடுத்த நியாயதீர்ப்பு, ஐந்தாவது நியாயதீர்ப்பு, இந்த உபத்திரவ காலத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மக்கள் அனைவரும் இரத்தசாட்சிகளாக கொல்லப்படுவார்கள். கிறிஸ்தவர்கள் அல்ல, அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள், இவர்கள் கிறிஸ்துவை நம்பும் யூதர்கள் மற்றும் புறஜாதிகள். வானமண்டலத்தில், பிரபஞ்சத்தில் உண்டாகும் நியாயதீர்ப்பினால் தேவன் சந்திரனை இரத்தமாகவும், சூரியனை இருளாகவும் மாற்றுவார். நாம் இன்றைக்கு கேட்கும் பூமி அதிர்ச்சிகள் அனைத்தும் அந்த நாட்களில் உலகமெங்கிலும் அதிகரித்துகொண்டிருக்கும். அதுதான் ஆறாவது முத்திரை நியாயதீர்ப்பு.

ஏழாவது 8ம் அதிகாரம் 1ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பரலோகத்தில் அரைமணி நேரத்திற்கு அமைதல் உண்டாயிற்று. பூமியில் இருக்கும் மக்கள் மீது இந்த நியாயதீர்ப்புகள் நிறைவேற்றப்படும்போது பரலோகத்தில் இருந்து பார்க்கும் நமக்கு அது பெரிய அதிர்ச்சியை உண்டாக்கிடும் என்பதை இது எடுத்துரைக்கிறது. ஏழு முத்திரை நியாயதீர்ப்புகளுக்கு பிறகு ஏழு எக்காள நியாயதீர்ப்பு துவங்குகிறது. இங்கு சுற்றுச்சூழலில் நியாயதீர்ப்பு நிறைவேறும், ஏனென்றால் இந்த எக்காள நியாயதீர்ப்புகளின் துவக்கத்தில், சமுத்திரம் மூன்றில் ஒரு பங்கு இரத்தமாவதை

பார்க்கிறோம். சமுத்திலத்தில் உள்ள மீன்களில் 3ல் ஒருபங்கு சேதமாகும், சமுத்திரத்தின் அலைகளில் இருக்கும் கப்பல்களில் மூன்றில் ஒரு பங்கு அழிக்கப்படும். அதை தொடர்ந்து மரங்கள் செடிகொடிகள் புல்பூண்டுகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிறது. எக்காள நியாயதீர்ப்பின்போது பூமியின் சுற்றுசூழலில் நியாயதீர்ப்பு நிறைவேறுகிறது, இதற்க்கு பிறகு கடைசி மூன்றரை ஆண்டுகளில் 7 கலச நியாயதீர்ப்பும் நிறைவேறுகிறது, அவை அதிக தீவிரமாக இருக்கும் அதற்கு பிறகு இயேசுகிறிஸ்துவின் வருகை இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட் இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம் மீண்டும் வரும்போது , நான் ஜிம்மியிடம் வெளிப்படுத்தல் 11:3-13ல் நடப்பதை குறித்து விளக்கமாக நமக்கு எடுத்துக்கூறும்படி கேட்கப்போகிறேன், 2 சாட்சிகளை பற்றியவை. இந்த 2 சாட்சிகள் யார் அவர்கள் என்ன செய்வார்கள் போன்ற பலவிதமான கேள்விகளை வைத்து பல விவாதங்கள் நடந்துவருகிறது. ஜிம்மி அதை தெளிவுபடுத்துகிறார், அதைதான் நாம் பார்க்க இருக்கிறோம், அதற்கு பிறகு இந்த பூமிக்குள் நுழையும்படி தேவன் அனுமத்தித்த அந்நிய ஜந்துகளை பற்றி பார்ப்போம், பாதாளக்குழயில் இருந்து வந்தவை. நீங்கள் இதை மிஸ் பண்ணாம பாருங்க. இணைந்திருங்கள், மீண்டும் சந்திப்போம்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வரவர்க்கிறோம் நாம் டாக்டர். ஜிம்மி டியோங்குடன் பேசிக்கொண்டிருக்கிறோம், தேவன் எதிர்காலத்தில் சம்பவிக்கப்போகிற நிகழ்வுகளை குறித்து வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறியிருப்பவைகளை பற்றிய அதிகமான தகவல்களை பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஜிம்மி உபத்திரவ காலத்தின் முதல் மூன்றரை ஆண்டுகள் பிரசங்கிப்பவராக இருக்கப்போகிற 2 சாட்சிகளை பற்றி துரிதமாக சொல்லுங்க. அவர்கள் யார் என்பதை பற்றி சொல்லுங்க. அவர்கள் என்ன செய்வார்கள் என்றும் என்ன சொல்லுவார்கள் என்றும் வேதம் கூறுகிறது, அவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்றும் இருக்கிறது.

**Dr. ஜிம்மி டியோங்**: ஜான். நஅந் அதை சொல்வதற்கு முன்பு, எல்லாருக்கும் ஒன்றை நினைவுபடுத்துகிறேன், வெளிப்படுத்தலை பற்றி நாம் பார்ப்பது திறவுகோல் போன்றது, ஏனென்றால் இதுதான் வழித்தடத்தை காண்பிக்கிறது. இது ஒரு எலும்புகூடு போன்றது வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து வித்தியாசமான பகுதிகளை எடுத்து அதை சரியான இடத்தில் நாம் பொறுத்திட வேண்டும்.

நாம் பார்த்த அந்த நியாயதீர்ப்புகள் முடிவடைந்து இப்போது உபத்திரவ காலத்தின் கடைசி பாதியில் இருக்கிறோம். இப்போதும், இந்த 2 சாட்சிகளை பார்க்கும்போது, இறுதிகாலத்தை பற்றிய நம்முடைய பயணத்தில் நான் சபை எடுத்துக்கொள்ளப்படுதலை கடந்து வந்திருப்பதை கவனியுங்கள். இப்போது இந்த 2 சாட்சிகள் தோன்றுகிறார்கள். 11ம் அதிகாரம், வசனம் 3 லிருந்து, வரப்போகிற 2 சாட்சிகளை பற்றி கூறப்பட்டுள்ளது. அவர்கள் எருசலேம் நகரத்தின் தேவால பர்வதத்தில் இருப்பார்கள் என்று கூறப்படுகிறது.

அவர் மூன்றரை ஆண்டுகளுக்கு பிரசங்கிப்பார்கள். வேதம் சொல்கிறது 1260 நாட்கள். சரி, இது தனித்துவமானது, ஏனென்றால் அது கிறிஸ்தவர்களின் மூன்றரை ஆண்டுகள் கிடையாது, அது யூதர்களின் மூன்றரை ஆண்டுகள். சந்திர கால அட்டவணையை கொண்ட யூத ஆண்டுகள், அதில் 12 மாதங்களிலும் 30 நாட்கள் இருக்கும், 360 நாட்கள். 1260 நாட்கள் என்று சொல்லும்போது அதைதான் குறிப்பதாக இருக்கிறது. சபை உபத்திரவ காலத்தில் இருக்காது என்பதற்கு இது மற்றொரு ஆதாரமாகவும் இருக்கிறது. அது யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் உடையது.

இந்த 2 சாட்சிகளும் அவர்களுடைய ஊழியத்தின் 1260 நாட்கள் அல்லது மூன்றரை ஆண்டுகள் பாதுகாப்பாக இருப்பார்கள். உதாரணமாக, யாராவது அவர்களை ஏதாவது ஆயுதத்தை பயன்படுத்தி கொள்ள முயன்றால், அந்த ஆயுதம் தவறாக செயல்பட துவங்கும், தாக்க வந்தவர் மரித்திடுவார் – 2 சாட்சிகளும் காக்கப்படுவார்கள். அவர்களால் மழை பெய்யாதபடி தடுக்க முடியும். பூமியின் மேல் வாதிகளை உண்டு பண்ண முடியும், இந்த 2 சாட்சிகளும் பிரசங்கிக்கும் காலத்தில் பாதுகாக்கப்படுவார்கள். அதன் முதல் பலனாக 144,000 ஆண்கள், யூத கன்னிகைகள் இயேசுகிறிஸ்துவை மேசியாவாக இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள். இதை 7ம் அதிகாரத்தில் பார்க்கிறோம், வசனம் 4லிலிருந்து. இந்த 2 சாட்சிகளும் 144,000 ஆண்களும், கண்ணிகைகளுமான யூதர்கள் உலகமெங்கிலும் சென்று, ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசன்கித்திடுவார்கள், எனவே எல்லாரும், அந்த 7 ஆண்டு கால சமயத்தில், ராஜ்யத்தின் சுவிசேஷத்தை கேட்க்கும் படியான சந்தர்ப்பத்தை பெறுகிறார்கள்.

அந்த 2 சாட்சிகள் யார் என்பதை பற்றி அதிக குறிப்புகள் இருக்கிறது. 2 மனிதர்களை சொல்லமுடியும் எனபது என்னுடைய கருத்து: எலியா, அவர் ஒருவர், உண்மையில், இவர்தான், யோர்தான் நதியை கடந்ததும் அக்கினி ரதங்களினால் வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர். அடுத்தது, ஏனோக்கு, ஆதியாகமம் 5. ஒரு நாள் அவர் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தார். வேன்ஸ் ஹேனர் கூறக் கேட்ட சிறிய கதை எனக்கு மிகவும் பிக்கும். அவர் தேவனோடு நடந்துகொண்டிருக்கையில், தேவன் அவரிடம் கூறினார், “ஏனோக்கே பார், உன்னுடைய வீட்டைவிட என்னுடைய வீட்டிற்கு மிக அருகில் நாம் வந்துவிட்டோம் – அதனால் வா, என்னுடைய வீட்டிற்கு போவோம் என்றார்.” அப்படிதான் அவர் எடுத்துக்கொள்ளப்பட்டாறாம்.

இந்த 2 மனிதர்கள், எலியாவும் ஏனோக்கும் மரிக்கவில்லை. வேதம் கூறுகிறது எபிரேயர் 9:27ல், “ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயதீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.” அவர் திரும்ப பூமிக்கு வருவார்கள் என நம்புகிறேன், அவர்கள் தான் அந்த 2 சாட்சிகள், எலியா மற்றும் ஏனோக்கு, கொல்லப்படுவார்கள், மூன்றரை நாட்களுக்கு பிறகு, அதாவது அவர்கள் எருசலேமின் வீதியில் 3 ½ நாட்கள் கிடத்தப்பட்டிருப்பார்கள், அவர்கள் எருசலேமின் வீதிகளில் கிடப்பதை உலகம் முழுவதும் காண்பார்கள். அவர்கள் என்ன செய்வார்கள் என்று தெரியுமா, ஜான்? கொண்டாட்டத்தின் நேரம்! அதாவது, பரிசுகளை அனுப்புவார்கள். வசனம்

சொல்லுகிறது, அவர்கள் பரிசுகளை பகிர்ந்துகொண்டு, அந்த 2 சாட்சிகளும் இனி தங்களை துன்புறுத்த மாட்டார்கள் என்று சொல்லி ஆண்தமாக இருப்பார்களாம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அதை பற்றி பேசிடலாம். அதிக வல்லமை கொண்டிருந்த அவர்கள் மரித்துவிட்டார்கள் என்பதினால் இந்த சந்தோசம் உண்டானதா. அவர்கள் பிரசங்கித்த நாட்களில் தேவன் அவர்களுக்கு அதிக வல்லமையை அளித்திருந்தார். அவர்கள் யாராவது தொட முயன்றால், என்ன சம்பவிக்கும்?

**Dr. ஜிம்மி டியோங்:** அவர்களை அழிக்கும்படி வானத்திலிருந்து அவர்களை அக்கினியை வரவழைக்க முடியும், அவர்களை மரணத்திற்கு ஒப்புவிப்பார்கள். அவர்கள் தேவனால் பாதுகாக்கப்பட்டார்கள், இதுதான் திறவுகோல், இது முதல் மூன்றரை ஆண்டுகள் நடந்துகொண்டிருந்தது, அதினால் இதுவை தேவனுடைய சுவிசேஷத்தை கேள்விப்படாதவர்கள் அதை கேட்க்கும் சந்தர்ப்பத்தை அடைந்தனர். மேலும் அவர்கள், மீண்டும் உயிரோடு எழுந்து பரலோகத்திற்குள் பிரவேசித்திடுவார்கள். இப்போது ஒருசில விஷயங்களை குறித்து யோசிக்கும்படிக்கு உங்கள் மூளைக்கு வேலை கொடுக்கும்படி செய்யட்டுமா இதை யோசியுங்கள்? லூக்காவின் சுவிசேஷம், 24ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்துவின் கல்லறைக்கு அருகில் வெள்ளையங்கி தரித்த இருவர் நிர்ப்பத்தை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. மரியாள் வந்தபோது, அவர்கள், “அவர் இங்கே இல்லை, உயிர்த்தெழுந்தார் என்றனர்.” அப்போஸ்தலர் 1ம் அதிகாரத்திலும், அவர் பரலோகத்திற்கு ஏறிச்செல்லும் பொது ஒலிவ மலையில், வசனம் சொல்லுகிறது, வெள்ளையங்கி தரித்த இரண்டு பேர் நின்று, “ஏன் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? எப்படி போனாரோ, அப்படியே மறுபடியும் திரும்ப வருவார் என்றனர்.” நஅந் நினைக்கிறேன் இந்த 2 சாட்சிகளான – எலியா மற்றும் ஏனோக்கு – உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து, பரமேரிச்செல்வதை பார்த்தார்கள். அவர் மீண்டும் வருவார் என்பதை அறிந்திருந்தனர். அதனால் தான் அவர்கள் இந்த மூன்றரை ஆண்டுகள் இந்த இடத்தில் பிரசங்கிக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், முத்திரை நியாதீர்ப்பும் சுற்றுசூழலின் மாற்றங்களையும் பார்த்தோம். எக்காள நியாயதீர்ப்புகள் சுவாரஸ்யமாக இருக்கிறது. குறிப்பாக ஐந்தாவது எக்காளம். மரங்கள் எல்லாம் தேவனால் சேதப்படுவதாக , வெளிப்படுத்தல் 8:7 கூறுகிறது. சமுத்திரம் சேதப்படுகிறது 8:9. தண்ணீர் சேதப்படுகிறது 8:10, வானமண்டலம் சேதப்படுகிறது 8:12. அதற்கு பிறகு அந்தாவது எக்காளம், நமக்கு அடுத்ததாக, என்ன நடக்கப்போகிறது என்பதை எடுத்துக்கூறுகிறதல்லவா?

**Dr. ஜிம்மி டியோங்:** என்ன நடக்கிறதென்றால் பாதாளக்குழி திறக்கப்படுகிறது. தேவன் பாதாளக்குழியின் திறவுகோலை எடுக்க சாத்தானுக்கு அதிகாரம் கொடுக்கிறார். அதை திறந்தவுடன், அந்த பாதாளக்குழயில் இருந்து – இப்ப அந்த பாதாள குழி எங்கே இருக்கிறது, என்று நமக்கு தெரியாது, என்னுடைய கருத்து அது வெளிப்புறமான ஏதோவொரு இடத்தில் இருக்கலாம், ஒருவேளை விஞ்யானிகள் கூறும் அந்த இருண்ட

துவாரமாக இருக்கலாம் – எங்கிருந்தாலும், அந்த பாதாளக்குழயில் இருந்து பிசாசுகளும் அந்நிய ஜந்துக்களும், வித்தியாசமான பறக்கும் பிராணிகளும் வந்தன.

நா, எதற்காக இதை சொல்லுகிறேன்? நான் UFO வை பற்றி சொல்வது போல தோன்றுகிறதா. வெல், இந்த வசனத்தில் அதற்க்கு வெட்டுக்கிளிகள் என்று சொல்லப்பட்டுள்ளது. அது பச்சையான வெட்டுக்கிளிகளை போன்றதல்ல – குதித்து,குதித்து, போவது – இல்ல இது வேறு விதமான வெட்டுக்கிளி, அது பூமியை தாக்கும் வேற்று கிரக ஜந்துக்கள் என நஅந் நினைக்கிறேன். இந்த பூமியை நோக்கி வரும் ஜந்துக்கள் மற்றும் தீய தூதர்களை பற்றிய விளக்கங்களில் இதை பற்றி சொல்லப்படிருக்கிறது, அதாவது அதற்கு மனித முகமும், பெண்ணின் கூந்தலும், சிங்கத்தின் பற்களும், குதிரை யுத்தத்திற்கு போவதுபோன்ற மார்பும், வலுசர்ப்பத்தின் வாலும் இருக்கும். அதினால் பூமியை உபத்திரவ படுத்த முடியும். அடுத்ததாக ஆறாவது எக்காள நியாயதீர்ப்பபை பார்க்கும்போது, அவை கொல்லுகிறது. இந்த தீய தூதர்கள், பாதாளக்குழயில் இருந்து வருபவை, பூமியின் 3ல் ஒரு பங்கினரை கொன்றுபோடும். அதற்க்கு அர்த்தம் என்னவென்றால் அந்த, சமயத்தில் ஜனத்தொகையில், 3 பில்லியன் மக்கள் கொல்லப்படுவார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், ஜிம்மி, முத்திரை நியாயதீர்ப்பை பற்றி கூறினீர்கள், அடுத்தது எக்காள நியாயதீர்ப்பு மேலும் அது அதிக மோசமான விளைவுகளை கொடுக்கிறது அடுத்தது கலச நியாயதீர்ப்புகள். அப்பா இந்த பூமிக்கு என்னதான் சம்பவிக்கும்?

**Dr. ஜிம்மி டியோங்**: அது சீக்கிரமே தெரியவரும், ஜான், ஏன்னா இவையனைத்தும் 7 ஆண்டு உபத்திரவ காலத்தின் இறுதியை நோக்கிகொண்டிருக்கிறது, பாபிலோன் நகரத்தின் நிஜமான அழிவு உண்டாகும். அதற்க்கு முன்னதாக, இந்த சுற்றுசூழலில் உண்டான நியாயத்தீர்ப்பிநாள் உண்டான நிலை பார்க்கலாம். நினைவிருக்கட்டும் இந்த எக்காள நியாயதீர்ப்பில், சமுத்திரத்தில் 3ல் ஒரு பங்கு இரத்தமாயிற்று, மீன்களில் மூன்றில் ஒரு பங்கு செத்துப்போனது. இந்த கலச நியாயதீர்ப்பில், சமுத்திரம் முழுவதும் இரத்தமாகும், எல்ல மீன்களும் சாகும். சூரியன் அதிக வெப்பமாகும், பூமியில் உள்ளவர்களை அது தகிக்கும் புண்கள் அதிக வருத்தமளிக்கும், அவர்கள் தங்கள் நாவுகளை கடித்துக்கொள்வார்கள். ஒன்றை நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். வசனத்தில், 16 அதிகாரத்தில், பூமியில் உள்ள இந்த ஜனங்கள், இந்த கொடூரமான நியாயதீர்ப்பில் இருப்பவர்கள், இயேசு கிறிஸ்துவின் பக்கமாக திரும்புவதேயில்லை. நடக்கிற காரியங்களை பார்த்து அவரை தூஷிப்பவர்களாக இருக்கிறார்கள்.

ஆறாவது கலச நியாயதீர்ப்பில், 16ம் அதிகாரம், வசனம் 12, கிழக்கிலுள்ள ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாக இருக்கிறது என்பதை பார்க்கிறோம். அவர்கள் எருசலேமிற்கு வரவும் உபத்திரவ காலத்தின் இறுதியில் உலக ராஜ்யங்களை ஒன்று திரட்டவும் ஆயத்தமாகிறார்கள். ஐப்பிராத்து நதி, அது மத்திய கிழக்கிற்கும் கிழக்கு பகுதிக்கும் இடையேயான கரை, அது வற்றிப்போய், இந்த ராஜாக்களுக்கு வழியை உண்டாக்கி தருகிறது.

சுவாரஸ்யமான பகுதி, பிரிக்கப்பட்டதாக சொலப்படும் பகுதி, 16ம் அதிகாரம், வசனங்கள் 13 முதல் 16 வரை, சாத்தானை பற்றி, அந்திகிறிஸ்து கள்ளத்தீர்க்கதரிசியை பற்றி சொல்கிறது, இது சாத்தானின் திரித்துவம் என்பது நினைவிருக்கட்டும், அவை அற்புதங்களை நடத்தி, அதிசய அடையாளங்களை நடப்பித்து உலக தலைவர்களை ஒன்றுதிரட்டி, பூமியின் மக்களை கவர்ந்து இயேசு கிறிஸ்து வரும்போது அவருக்கு விரோதமாக யுத்தம் பண்ண எருசலேமில் சேர்க்கும். அதை தாம் அர்மகேதொன் யுத்தம் என்கிறோம், அது எருசலேமில் தான் துவங்கும். அர்மகேதொனில் பாளயமிறங்கும் காரியத்தை கொஞ்சம் மாற்றி சொல்லலாமென நினைக்கிறேன், அதிலிருந்து துவங்கி அந்த யுத்தம் எஸ்ரேயேல் பள்ளத்தாக்கில் நடைபெறும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், இந்த நியாயதீர்ப்புகள் எதற்காக என்று மக்கள் அறிந்து கொள்ள விரும்புகிறார்கள். இதற்கான நோக்கம் என்ன?

**Dr. ஜிம்மி டியோங்**: இதற்கான நோக்கம் பூமியையும் அதில் இருப்பவர்களையும் கீழ்ப்படிதலுக்குள் கொண்டு வரவேண்டும் என்பதுதான். தானியேல் 7 கூறுகிறது தேவன், என்றென்றும் உள்ளவர், மனுஷ குமாரனுக்கு, தனது குமாரனுக்கு ராஜ்யத்தை கொடுப்பார். யூத ஜனங்களுக்கு வாக்கு கொடுக்கப்பட்ட ராஜ்ஜியம். அவருடைய வருகைக்கு பிறகு, அவர் ஆயிர வருட அரசாட்சியை நிறுவிடுவார். அதினால் இந்த பூமி அவருக்கு கீழ்ப்பட்டிருக்கவேண்டும், பூமியின் குடிகளும் அவருக்கு கீழ்ப்பட்டிருக்கவேண்டும். புரஜாதியின் வல்லமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக. நேபுகாத்நேச்சாருக்கு தானியேல் விளக்கி சொன்ன தீர்க்கதரிசனம் நினைவிருக்கிறது, உலகத்தின் வல்லமைகள் அனைத்தும் தகர்க்கப்படும். ஒரு முடிவை ஏற்படுத்துவதற்காகவும் சாத்தனின் திரித்துவத்தை தகர்ப்பதற்காகவும்: சாத்தான், அந்திகிறிஸ்து மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி. அவை அக்கினி கடலில் தள்ளப்படும், அங்கே நித்திய நித்தியமான வேதனை உண்டாயிருக்கும். இந்த உபத்திரவ காலத்திற்கான 3 வது காரணம், இந்த பூமியின் மேல் நியாயதீர்ப்பு வர காரணம், யூத ஜனங்களை அவர்களுடைய இரட்சகரான, மேசியாவான யேசுவிடம் சேர்த்திட.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், நற்செய்தி என்ன? உபத்திரவ காலத்திற்கு எவ்வளவு அருகில் நாம் நிற்கிறோம்? அதற்கு முன்னதாக, எடுத்துக்கொள்ளப்படுதல் இருக்கிறது. கேள்விகளோடு இருக்கும் ஜனங்களுக்கு சொல்லுங்க, எவ்வளவு அருகில் இருக்கிறோம், ஆயத்தமாக நான் என்ன செய்ய வேண்டும்?

**Dr. ஜிம்மி டியோங்**: உங்களுக்குஒன்றை சொல்லுகிறேன், சபை எடுத்துக்கொள்ளப்பட்டவுடன் உதயமாகும் அந்திகிறிஸ்துவை பற்றி பார்த்தோம். அந்திகிறிஸ்து வெளிப்பட அனைத்தும் ஆயத்தமாக இருக்கிறது. புதுபிக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் தயார், அவன் தோன்றுவான், யூதர்களோடு உடன்படிக்கையை உறுதிபடுத்திடுவான், இஸ்ரேலோடும் மற்ற தேசங்களோடும் கைகொடுப்பான். அதே சமயத்தில், அவர்கள் தங்கள் ஆயுதங்களை ஓயப்பண்னும்போது, எசேக்கியல் 38:8, 11, இந்த சமாதானம் என்ற குடையின் கீழ் இருப்பதால் அவர்கள் தேசத்தில் சமாதானமாக

இருப்பார்கள், மேசியாவாக தன்னை காண்பித்திடுவான், அந்த அந்திகிறிஸ்து, தேசங்களை எல்லாம் ஒன்றுதிரட்டிடுவான்.

முதல் இரண்டு நியாயதீப்புகளை பற்றி நீங்கள் சிந்தித்து பாருங்கள் அதோடு நாம், பேசின மற்றவைகளையும் யோசித்து பாருங்கள். திரைசீலை விலகப்போகிறது, எடுத்துக்கொள்ளப்படுதல் அல்ல, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை. ஒன்றை மட்டும் சொல்கிறேன் எடுத்துக்கொள்ளப்படுதல் இவற்றிற்கு ஆரம்பம். சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக இதில் எந்த நியாயதீர்ப்பும் நடைமுறைபடாது.

என்னுடைய யோசனை, ஒருவேளை நாம் இந்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதளுக்கு அருகில் இருந்தால், எடுத்துக்கொள்ளப்படுதல் எவ்வளவு சமீபமாக இருக்கும்? இந்த நிகழ்ச்சியை கேட்டுக்கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும். நண்பர்களே, இந்த பூமியின் மீது வரவிருக்கும் நியாயதீர்ப்புகளை பற்றி உங்களோடு பகிர்ந்துகொண்டிருகிறோம். நீங்கள் அந்த நியாயதீர்ப்புகளை சந்திக்க வேண்டாம். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுங்கள், உங்கள் தேவனாக இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். அந்த நாளுக்காக உங்களை ஆயத்தப்படுத்திடுங்கள். நீங்கள் பாவிஎன்பதை ஒப்புக்கொள்ளுங்கள், நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலை விசுவாசியுங்கள். அவர் உங்களை இரட்சிப்பார். அவரை உங்கள் இருதயத்திலும் உங்கள் வாழ்விலும் பிரவேசித்து உங்களை இரட்சிக்கும்படி கேளுங்கள் நிச்சயம் வந்திடுவார். உங்களை காத்துக்கொள்வார், வெளிப்படுத்தின விசேஷம் 3ம் அதிகாரம், 10ம் வசனம், உபத்திரவ காலத்தில் வரவிருக்கும் நியாயதீர்ப்புகளின் நிறைவேருதளுக்கு உங்களை விளக்கிடுவார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்த வாரம் எல்லாருக்கும் தெரிந்த சில முக்கியமான பெரிய நிகழ்வுகளை பற்றி பார்க்க இருக்கிறோம்: அர்மகேதொன் யுத்தம், ஆயிர வருட அரசாட்சியை பற்றி பேசிடுவோம், பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பை பற்றியும் பார்த்திடுவோம். நேயர்களே, இதை தவற விடாதீர்கள், நீங்கள் தொடர்ந்து இணைந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.